## மணிப்பூரில் பெண்கள் பலாத்காரம், வன்முறை!

# பெண் நீதிபதிகள் அடங்கிய விசாரணைக் குழு அமைப்போம்!

## உச்சநீதிமன்றம் அதிரடி! காவல்துறைக்கு கடும் கண்டனம்!

**புதுடெல்லி, ஆக. 2 - மணிப்பூர் வன்முறையில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற பெண் நீதிபதிகள் கொண்ட குழுவை அமைக்க பரிசீலிப்பதாக உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. கலவரத்துக்கு உடந்தையாக இருந்த மணிப்பூர் மாநில போலீசாருக்கு கடும் கண்டனத்தை நீதிபதிகள் பதிவு செய்துள்ளனர்.**

மணிப்பூரில் இரு பிரிவினர் இடையே ஏற்பட்ட மோதல் இனக் கலவரமாக மாறி, கடந்த 3 மாதமாக வன்முறை நீடிக்கிறது. இதில் 160 பேர் கொல்லப்பட்டுள்ளனர். வன்முறையில் சிறுபான்மை மக்களான பழங்குடியின குக்கி பெண்களுக்கு எதிராக பல்வேறு கொடூரங்கள் நடந்துள்ளன. கடந்த மே 4ம் தேதி அன்று 2 பழங்குடியின பெண்களை நிர்வாணமாக்கி நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்கள் ஊர்வலமாக இழுத்துச் சென்ற வீடியோ சமூக வலை தளங்களில் வெளியாகி நாட்டையே உலுக்கியது.

இந்த விவகாரம் தொடர்பாக உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கு பதிந்து விசாரிக்கிறது. இந்த விவகாரம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாக ஒன்றிய அரசு பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது. இந்த நிலையில், பாதிக்கப்பட்ட 2 பெண்கள் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், "சிறப்பு புலனாய்வுக் குழு (எஸ்.ஐ.டி.) விசாரணைக்கு உத்தரவிடப்பட வேண்டும். எங்களுக்கு உரிய பாதுகாப்பு தரப்பட வேண்டும். எங்களின் அடையாளங்கள் வெளிப்படுத்தப்படாமல் பாதுகாக்க வேண்டும். அருகில் உள்ள மாஜிஸ்திரேட் மூலமாக குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 164ன் கீழ் எங்கள் வாக்குமூலத்தை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என கோரி இருந்தனர்.

இந்த மனு தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் கொண்ட அமர்வில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. பாதிக்கப்பட்ட 2 பெண்கள் சார்பாக ஆஜரான மூத்த வழக்கறிஞர் கபில் சிபல், "குற்றம் செய்தவர்களுடன் மாநில போலீசார் கைகோர்த்துள்ளனர். போலீசார்தான் 2 பெண்களையும் கும்பலிடம் அழைத்துச் சென்றுள்ளனர். அந்தக் கும்பலிடம் போலீசார் தான் 2 பெண்களை ஒப்படைத்துள்ளனர். அதன்பிறகுதான் எல்லாம் நடந்துள்ளது. அப்படியிருக்கையில், சி.பி.ஐ. விசாரணை மீது பாதிக்கப்பட்ட



பெண்களுக்கு எப்படி நம்பிக்கை வரும். அந்தப் பெண்கள் நம்பிக்கை வைக்கும் விசாரணை அமைப்பு தான் இப்போது நமக்கு தேவை. அதனால் தான் சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்பட வேண்டும். இதுவரையிலும் மணிப்பூர் வன்முறை தொடர்பாக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது பற்றி ஒன்றிய, மாநில அரசுகளுக்கே தெரியாது என்பதுதான் வேதனை" என்றார்.

மூத்த வழக்கறிஞர் இந்திரா ஜெய்சிங், "பலாத்காரத்தால் பாதிக்கப்பட்ட பலரும் அதிர்ச்சியில் உள்ளனர். முதலில் அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். எனவே சிறப்பு விசாரணைக் குழுவை அமைக்க வேண்டும்" என்று வாதிட்டார். பெண்கள் அமைப்பு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் விருந்தா குரோவர் வாதாடுகையில், "மணிப்பூரில் சிறுபான்மையினராக உள்ள குக்கி பழங்குடியின பெண்களுக்கு எதிராக பல பாலியல் வன்கொடுமை வழக்குகள் உள்ளன. கார் கழுவும் மையத்தில் பணிபுரிந்த 2 பெண்கள் ஒரு கும்பலால் கூட்டு பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் குடும்பத்தினர் நிவாரண முகாம்களில் உள்ளனர். கொல்லப்பட்ட பெண்களின் உடல்கள் எங்கே என்றே தெரியவில்லை. இது குறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதே தவிர எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை" என்றார்.

இதைக் கேட்ட தலைமை நீதிபதி சந்திரசூட் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது: இரண்டு பெண்களுக்கு எதிராக கொடூரமான சம்பவங்கள் நடந்துள்ளது. அதைப் பற்றி அருகில் இருந்த போலீசாருக்கு தெரியவில்லை என்றால் அதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். இந்த விவகாரத்தில் வழக்குப் பதிவு செய்ய 14 நாட்கள் போலீசார் எடுத்துக் கொண்டது ஏன்? எதற்காக காலதாமதமாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது? வன்முறை தொடர்பாக இது வரை 6,000 வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. அதில் எத்தனை எப்.ஐ.ஆர். உள்ளது, பூஜ்ய எப்.ஐ.ஆர். எத்தனை, எத்தனை கைதுகள், எத்தனை பேர் நீதிமன்ற காவலில் உள்ளனர், 164 சட்டப்பிரிவின் கீழ் எத்தனை பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது, எத்தனை பேருக்கு சட்ட உதவி வழங்கப்பட்டுள்ளது என்ற விவரங்களை மாநில அரசு தாக்கல் செய்ய வேண்டும்.

இந்த விஷயத்தில் சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைப்பது தொடர்பாக ஒன்றிய, மாநில அரசுகள் தங்கள் கருத்தை தெரியப்படுத்த வேண்டும். சிறப்பு புலனாய்வுக் குழு அமைப்பது தொடர்பாக ஆய்வு செய்ய ஓய்வு பெற்ற 2 பெண் நீதிபதிகள் கொண்ட குழுவை அமைக்க நாங்கள் பரிசீலிக்கிறோம்.

இவ்வாறு தலைமை நீதிபதி உத்தரவிட்டார்.

ஒன்றிய அரசு தரப்பில் ஆஜரான அட்டார்னி ஜெனரல் ஆர்.வெங்கடரமணி மற்றும் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா ஆகியோர் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பான விவரங்களை தாக்கல் செய்ய கூடுதல் அவகாசம் கோரினர். அதனை தலைமை நீதிபதி நிராகரித்தார்.

**மணிப்பூர் கொடூரத்தை எதனுடனும் ஒப்பிட முடியாது!**

விசாரணையின் போது, மேற்கு வங்கத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை வழக்குகளையும் இந்த வழக்கோடு சேர்ந்து விசாரிக்க வேண்டும் என வழக்கறிஞர் பன்சூரி ஸ்வராஜ் கோரிக்கை விடுத்தார்.

அவர் வாதாடுகையில், "மேற்கு வங்கத்திலும் இதுபோன்ற கொடூரமான வழக்குகள் உள்ளன. சட்டீஸ்கர், ராஜஸ்தான் மாநிலத்திலும் பெண்களுக்கு எதிரான கொடூரம் நடந்துள்ளது. எனவே நாடு முழுவதும் இந்திய மகளிர் பாதுகாக்கப்பட வேண்டும்" என்றார்.

இதைக் கேட்ட தலைமை நீதிபதி, "மணிப்பூர் விவகாரம், நிர்பயா வழக்கை போல தனி ஒரு கும்பலால் நிகழ்த்தப்பட்ட வன்முறை அல்ல. இது ஒரு கட்டமைக்கப்பட்ட சமூக ரீதியான வன்முறை. மணிப்பூரில் பெண்களுக்கு எதிரான கொடூரங்கள் இனவெறிக் கோணத்தின் அடிப்படையில் வேறுபட்ட நிலையில் இருக்கிறது. மேற்கு வங்கத்தை போல மணிப்பூரிலும் நடக்கிறது என கூற முடியாது. எனவே இதனை வேறெந்த மாநிலத்துடனும் ஒப்பிட்டு நியாயப்படுத்த முடியாது. இந்தியா முழுவதும் உள்ள பெண்களை பாதுகாக்க வேண்டும். இல்லையென்றால் எந்த பெண்ணுக்கும் பாதுகாப்பு தரக்கூடாது என்று சொல்கிறீர்களா? என்று வழக்கறிஞர் பன்சூரி ஸ்வராஜிடம் காட்டமாக கேட்டனர்.

---

27 மாத கால ஆட்சியின் செயல்பாடுகளால்

# தமிழ்நாட்டு மக்களின் மனங்களில் நீக்கமற நிறைந்திருக்கிறார் முதல்வர்!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேச்சு!

சென்னை, ஆக.2-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (01.08.2023) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள், சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த மாதாந்திர சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது.

பின்னர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின் துறையின் செயல்பாடுகள், பணி முன்னேற்றம் குறித்த 25 வது சீராய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் உள்ளிட்ட 150 க்கும் மேற்பட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் வரலாற்று சிறப்புமிக்க திட்டமான அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தின் கீழ் சுமார் 100 க்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் அங்கு பின்பற்றப்படும் ஆகம விதிகளின் படி அர்ச்சகர்களை நியமனம் செய்வது குறித்தும், 13 திருக்கோயில்களில் ஏற்கனவே நடைபெற்றுள்ள ஓதுவார் பணியிடங்களுக்கான நேர்முகத் தேர்வின் அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்குவது குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

**கந்தகோட்டத்தில் மருத்துவ மையம்!**

புதிய அரசு பொறுப்பேற்றபின், நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் 8 திருக்கோயில்களிலும் ஒரு வேளை அன்னதானத் திட்டம் 764 திருக்கோயில்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தாண்டு சட்டமன்ற அறிவிப்பின்படி 2 திருக்கோயில்களில் முழு நேர அன்னதானத் திட்டமும், 7 திருக்கோயில்களில் ஒருவேளை அன்னதானத் திட்டமும் செப்டம்பர் மாதத்திற்குள் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும். அதேபோல 15 மலைக் கோயில்கள் மற்றும் முக்கிய திருக்கோயில்களில் தொடங்கப்பட்ட மருத்துவ மையங்கள் பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளதால் இந்தாண்டு ஆனைமலை மற்றும் சென்னை கந்தக்கோட்டத்தில் மருத்துவ மையங்களை விரைவில் தொடங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

1,000 ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களின் திருப்பணிகள் ரூ.300 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இதில் தமிழ்நாடு அரசு கடந்தாண்டு ரூ.100 கோடியும், இந்தாண்டு ரூ.100 கோடியும் நிதியாக வழங்கியுள்ளது. உபயதாரர்கள் மூலம் சுமார் ரூ.100 கோடி அளவிற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் 4 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நிறைவுபெற்று, 3 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கிற்கு நாள் குறிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின்கீழ் (Master Plan) இதுவரை திருச்செந்தூர், பெரியபாளையம், பழனி, திருத்தணி, திருவண்ணாமலை, சமயபுரம், மருதமலை, சிறுவாபுரி, மேல்மலையனூர் உள்ளிட்ட 15 திருக்கோயில்களில் ரூ.1,495 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. சிறப்பு திட்டங்களாக ரூ.65 கோடி மதிப்பீட்டில் ஔவையார் மணி மண்டபம், திருவள்ளுவர் திருக்கோயில் உள்ளிட்ட 4 பணிகளின் முன்னேற்றம் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

**கோயில் நில ஆக்கிரமிப்புகளை மீட்கும் பணி தீவிரம்!**

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபின் புதியதாக 3 தங்கத்தேர்களும், 5 வெள்ளித் தேர்களும், 51 மரத்தேர்களும் செய்யும் பணிகளும், 13 மரத்தேர்களை மராமத்து செய்யும் பணிகளும் நடைபெற்று வருகிறது. கடந்தாண்டு மயிலாப்பூர், திருவண்ணாமலை,தஞ்சாவூர், திருநெல்வேலி, பேரூர் ஆகிய 5 இடங்களில் மகா சிவ ராத்திரி பெருவிழா சிறப்பாக கொண்டாடப் பட்டது. இந்தாண்டு கூடுதலாக மதுரை மற்றும் திருவானைக்காவலில் நடத்தப்படவுள்ள மகா சிவராத்திரி விழா குறித்து விவாதிக்கப்பட்டது. நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டம் தற்போது 15 திருக்கோயில்களில் செயல்பாட்டில் உள்ளது. இந்தாண்டு மேலும் 5 திருக்கோயில்களில் விரிவுபடுத்தி வரும் ஆகஸ்ட் 15ஆம் தேதிக்குள் தொடங்கிட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இது வரை ரூ.4,995 கோடி மதிப்பிலான 5,436 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. விரைவில் ரூ.5,000 கோடியை எட்டுவோம். இந்த சொத்துக்கள் அனைத்தும் இதுவரை திருக்கோயில்களுக்கு பயன்படாமல் ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்தவை. தற்போது இதன்மூலம் திருக்கோயில்களுக்கு வருவாய் கிடைக்கிறது. இப்பணி தொடரும். மேலும், திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்களை பாதுகாத்திடும் வகையில் ரோவர் கருவி மூலம் இதுவரை ரூ.1,34,547 ஏக்கர் அளவீடு செய்யப்பட்டு எல்லைக் கற்கள் நடப்பட்டுள்ளன.

**அறிவிப்பு பலகை – மேல்முறையீடு!**

பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் இந்துக்கள் அல்லாதவர் உள்ளே வரக்கூடாது என்ற அறிவிப்பு பலகை வைப்பது தொடர்பான உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தீர்ப்பின்மீது மேல்முறையீடு செய்யப்படும். மேல்பாதி திருக்கோயிலை பொறுத்தளவில் தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் ஆய்விற்கு இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்களையும் அழைத்திருக்கிறார்கள். சட்டத்திற்குட்பட்டு அமைதி நிலை நாட்டி, அனைத்து சமூகத்தினரும் இறை தரிசனம் செய்வதற்குண்டான நடவடிக்கைக்கு துறை முழுமையாக ஒத்துழைப்பு நல்கும்.

அன்னைத் தமிழில் வழிபாடு திட்டம் தற்சமயம் 47 முதுநிலை திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு, அக்கோயில்களில் விளம்பர பதாகைகளில் அர்ச்சகர்களின் பெயர் மற்றும் தொலைபேசி எண் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இந்து சமய அறநிலைத்துறை சார்பில் 14 போற்றி புத்தகங்களை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். அர்ச்சகர் பயிற்சி பள்ளியில் பயிற்சி முடித்த 150 அர்ச்சகர்களை திருக்கோயில்களில் உதவி அர்ச்சகர்களாக மாதம் ரூ.6,000 என்ற ஊக்கத்தொகையுடன் நியமனம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்து சமய அறநிலையத்துறையில் பணி நியமனங்களுக்கு விளம்பரம் செய்யப்பட்டு நேர்முகத் தேர்வு நடத்ததி தேர்வு செய்யப்படுபவர்கள் அனைவருமே நிரந்தர பணியாளர்கள் ஆக்கப்படுவார்கள்.

அண்ணாமலையின் நடை பயணத்தால் எந்த ஒரு மாற்றமும் ஏற்படாது. ஒரு நாளைக்கு 3 மணி நேரம் நடந்து விட்டாலே பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு விடாது. ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 19 மணி நேரம் உழைக்கின்ற முதலமைச்சர் அவர்களை தமிழ்நாடு பெற்றிருக்கிறது. மக்களுடைய கோரிக்கைகள் எந்த மூலையில் இருந்து வந்தாலும் அதற்கு செவி சாய்த்து நிவர்த்தி செய்கின்ற அற்புதமான முதலமைச்சராக நமது முதலமைச்சர் அவர்கள் திகழ்கின்றார். 27 மாத கால ஆட்சியினுடைய செயல்பாடுகளில் அவர் தமிழ்நாட்டு மக்களுடைய மனங்களில் நீக்கமற நிறைந்து இருக்கிறார். 70 வயதிலும், 20 வயது இளைஞரை போல் துடிப்போடு செயல்படுகின்ற முதல்வரை பெற்றிருக்கின்றோம் என்ற பெருமையோடு மக்கள் இருக்கின்றார்கள். ஆகவே, எவரும் நடைபயணம் அல்ல, தவழ்ந்து வந்தாலும் சரி அல்லது ஏற்கனவே சொன்னது போல் குட்டிக்கரணம் அடித்து வந்தாலும் தமிழகத்தை பொறுத்தளவில் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கூட்டணி புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் வெற்றி பெறும் என்பதில் எவ்வித சந்ததேகமும் இல்லை.

**அண்ணாமலையின் பாவயாத்திரை!**

அண்ணாமலை மேற்கொண்டுள்ள நடைபயணம் என்பது கடந்த 9 ஆண்டுகளாக மத்தியிலே இருக்கின்ற பாரதிய ஜனதா ஆட்சி தமிழக மக்களை வஞ்சித்ததற்காக, அந்த பாவத்தை போக்குவதற்காக மேற்கொள்கின்ற யாத்திரையாக இந்த நடைபயணத்தை நாங்கள் கருதுகிறோம். ஒருவேளை அவர்கள் செய்த பாவத்திற்காக முதல் கட்டமாக ராமேஸ்வரம் கோயிலில் நீராடி பாவத்தை போக்கிவிட்டதாக கருதுகிறாரோ என்னவோ தெரியவில்லை. பாவம் செய்தவர்தான் நீராட வேண்டும் என்றால் அதற்கு உகந்தவர் அவரே.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசகன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, தலைமைப் பொறியாளர் சி.இசையரசன், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

மணிப்பூர் விவகாரம் :

# ஆக. 8ல் நம்பிக்கையில்லா தீர்மானம் மீது விவாதம்!

## ஆக.10ல் பிரதமர் மோடி பதிலளிப்பார் எனத் தகவல்!

புதுடெல்லி: ஆக. 2 -

மணிப்பூர் விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லா தீர்மானம் மீது வரும் 8ஆம் தேதி முதல் விவாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 10ஆம் தேதி நாடாளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடி பதிலளிப்பார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

மணிப்பூரில் மைத்தேயி - மற்றும் குகி இனத்தவர் இடையே கடந்த மே மாதம் 3ஆம் தேதி முதல் மோதல் நடந்து வரும் நிலையில், கடந்த ஜூலை 19 ஆம் தேதி ஒரு வீடியோ வெளியாகி வைரலானது. குகி ஸோ இனத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் ஆடையின்றி இழுத்துச் செல்லப்பட்ட பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படும் அந்த வீடியோ ஒட்டு மொத்த தேசத்தையும் உறைய வைத்தது. இந்த வன்முறை சம்பவம் தொடர்பாக, பிரதமர் மோடி பதில் அளிக்கக் கோரி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் முதல் நாள் தொடர்ந்து தொடர்ந்து வலியுறுத்தி வருவதால், நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடர் 8வது நாளாக நேற்று வரை முடங்கியது.

முன்னதாக, ஜூலை 26 ஆம் தேதி மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக மக்களவையில் நம்பிக்கையில்லா தீர்மானம் நோட்டீஸ் வழங்கப்பட்டது. காங்கிரஸ் கட்சியின் மக்களவை துணைத் தலைவர் அசாம் மாநில எம்.பி. கவுரவ் கோகோய் நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவருமாறு நோட்டீஸ் வழங்கினார். அவருடன் தெலங்கானா முதல்வர் கே.சந்திரசேகர ராவின் பாரத் ராஷ்டிர சமிதி கட்சியின் மக்களவைத் தலைவர் நாகேஸ்வர் ராவும் தனியாக ஒரு தீர்மானத்தை தாக்கல் செய்தார். காங்கிரஸ் தாக்கல் செய்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை இண்டியா கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் ஆதரிப்பதாகத் தெரிவித்தன.

மத்திய அரசு மீது காங்கிரஸ், பிஆர்எஸ் கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர நோட்டீஸ் அளித்த நிலையில், அதனை விவாதத்துக்கு ஏற்றுக் கொண்டதாக மக்களவை சபாநாயகர் அறிவித்ததோடு விவாதத்துக்கான நாளை பின்னர் அறிவிப்பதாகக் கூறியிருந்தார்.

இந்த நிலையில், ஆகஸ்ட் 8ஆம் தேதி முதல் எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையில்லா தீர்மானம் மீது விவாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் நம்பிக்கையில்லா தீர்மானம் மீது ஆகஸ்ட் 10ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி நாடாளுமன்றத்தில் விளக்கம் அளிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 20ஆம் தேதி தொடங்கிய நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் வரும் 11ஆம் தேதியுடன் நிறைவுபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதம் காரணமாக அவை அலுவல் நாட்கள் நீட்டிக்கப்படுமா என்ற கேள்விகளும் எழுந்துள்ளன. இதனிடையே, மணிப்பூரில் ஆடையின்றி இழுத்துச் செல்லப்பட்ட 2 குகி பழங்குடியினப் பெண்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர். இதுதொடர்பாக மத்திய, மாநில அரசுகள் அறிக்கை அளிக்க உத்தரவிட்ட உச்ச நீதிமன்றம் பல்வேறு கேள்விகளை எழுப்பியது குறிப்பிடத்தக்கது.

---



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (01.08.2023) ஆணையர் அலுவலகத்தில் துறையின் செயல்பாடுகள், சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த 25 வது சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க. வீ. முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, அனைத்து மண்டல இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மையம் கூட்டரங்கில், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் மற்றும் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறும் நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று, பயனாளிகளுக்கு ரூ.182.63 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, மேயர் மகாலட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.